# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 02.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1413/B/20**

திரு.இரா.மணிகண்டன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஈரோடு வட்டம்,
ஈரோடு மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.இரா.மணிகண்டன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திரு.செல்வகுமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 03.10.2019 தேதியிட்ட மனுவில், மனுதாரரால் ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 16.05.2019 மற்றும் 20.05.2019 தேதியிட்ட மனு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றின் நடவடிக்கை விவரங்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல் ஏதும் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 18.11.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்தும் தகவல் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் 07.02.2020 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 1வாரகாலம் அவகாசம் வழங்கப்பட்டு, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் கோரிய தகவல்களை வழங்க ஆணையிடப்பட்டது.

5. மேற்படி ஆணைக்கிணங்க, தகவல் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேற்படி வழங்கப்பட்டுள்ள தகவல்கள் குறித்து மனுதாரரை 11.11.2020 தேதியிட்டு தொடர்புகொண்டு கேட்டதற்கு, போதிய தகவல்களை பெற்றுக்கொண்டதாக தெரிவித்ததன் அடிப்படையில் இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 1413/B/20**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஈரோடு வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

திரு.இரா.மணிகண்டன்,
92/1, யூசுப் நகர்,
நடுப்பாளையம், சித்தோடு,
ஈரோடு மாவட்டம் - 638 102.

Copy to: File
MP/PA-12.11.20